கொற்கை அருகில் ஐயாவையனுர் ஆற்றின் குறுக்கே பாலம்

* 91 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலுக்காவில் கொற்கை பகுதிக்குப் போய் சேர வசதியாக ஐயாவையனுர் எனும் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லே.

திரு. என். கிட்டப்பா : மேற்கண்ட கொற்கை என்னும் ஊருக்குப் போகும் வழியில் ஐயாவையனுர் எனும் ஆற்றின் குறுக்கே பாலம் இல்லாத காரணத்தால் 15 மைலுக்கு மேலாகச் சுற்றிச் செல்ல வேண்டிய அவல நிலேமை இருக்கிறது. அரசாங்கம் இனிமேலாவது அங்கு ஒரு பாலம் அமைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லே என்று சொன்னேன். அங்கத்தினர் யோசனேயைத் தனியாகச் சொன்னுல் பரிசீலிக்கப்படும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : குறிப்பிட்ட அந்தப் பகுதியில் மழை பெய்தாலே தீவு போல இருக்கும். அங்கு விரைவில் ஒரு பாலம் அமைக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம் என்று சொல்லியிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் ஒயின் தயாரிக்கும் தொழிற்சாலே

* 92 வினு.—திரு. வை. சுவாமிநாதன்
திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஒயின் தயாரிக்கும் தொழிற்சாலே ஏற்படுத்த தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) இதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லே.

(இ) வினுவுக்கு இடமில்லே.

Cement produced in Tamil Nadu

*93 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any surplus in the quantity of cement produced in Tamil Nadu ;